# புதுவைப் பல்கலைக்கழக அலுவலர் கூட்டுறவு கடன் சங்கம் அளவறை எண்.508

## ஆர்.வி.நகர் காலாப்பட்டு புதுச்சேரி-14

---

**Ref.PUSCCS/TD.inc/E.Cir-3/2014-15/** நாள்.11.11.2014

<u>சுற்றறிக்கை</u>

**அன்புடையீர், வணக்கம்**

நிகழும் நவம்பர் மாதம் 14-ம் நாள் (14.11.2014) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் புதுவை பல்கலைக்கழக அலுவலர் கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர்களின் வாரிசுகளில் 10வது மற்றும் 12-ம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசளிப்பு வழங்கும் விழா, புதுவை பல்கலைக்கழக டாக்டர் **அம்பேத்கர் நிர்வாக கட்டிடத்தில் அமைந்துள்ள E.C. Hall-** ல் நடைபெற உள்ளது.

அவ்வமயம்

புதுவைப் பல்கலைக்கழக துணைவேந்தர்

**பேராசிரியர் (டாக்டர்) சந்திரா கிருஷ்ணமூர்த்தி அவர்கள்**

தலைமையுரை ஆற்றவும்

புதுவைப் பல்கலைக்கழக இயக்குநர்

**பேராசிரியர் (டாக்டர்) V. இந்துமதி அவர்கள்**

புதுவைப் பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு)

**பேராசிரியர் (டாக்டர்) S. பன்னீர்செல்வம் அவர்கள்**

வாழ்த்துரை வழங்கவும் இசைந்துள்ளார்கள்.

இவ்விழாவிற்கு சங்க உறுப்பினர்கள், பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் அனைவரும் வருகை தந்து வாழ்த்துக்களை நல்கிட அன்டன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம்**

U. ராமநாதன்
தலைவர்

புதுவைப் பல்கலைக்கழக அலுவலர் கூட்டுறவு கடன் சங்கம் அளவறை எண்.508
ஆர்.வி.நகர் காலாப்பட்டு புதுச்சேரி-14

---

Ref.PUSCCS/TD.inc/E.Cir-3/2014-15/ நாள்.11.11.2014

சுற்றறிக்கை

பொருள்: உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு கல்வி ஊக்கப் பரிசு வழங்குதல் - சம்பந்தமாக.

---

நமது சங்க இயக்குநர்கள் குழு ஒப்புதலுடன் நமது சங்க உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு (மகன்/மகள் மட்டும்) கடந்த 2013-14 கல்வி ஆண்டில் நடைபெற்ற 10-ஆம் மற்றும் 12-ஆம் வகுப்பு தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்றுள்ள மாணவ/மாணவியர்களுக்கு பரிசுத்தொகையும், சான்றிதழ்களையும் மற்றும் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் கடந்த ஆண்டு வழங்கப்பட்டதைப்போல் இந்த 2013-14 கல்வி ஆண்டும் நமது சங்கத்தில் கல்வி ஊக்கப்பரிசு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள முதல் மூன்று மாணவ/மாணவியர்களுக்கு ரொக்கத் தொகையாக கீழ்க்கண்ட விபரப்படி ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழும் மற்ற அனைத்து மாணவ மாணவியர்களுக்கு ரு.800/- (ருபாய் எண்ணூறு மட்டும்) ரொக்கப்பரிசு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது

ரொக்கப்பரிசு விபரம்

| வகுப்பு | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | ரு.2500/- | ரு.2000/- | ரு.1500/- |
| பன்னிரெண்டாம் வகுப்பு | ரு.2500/- | ரு.2000/- | ரு.1500/- |

**XthSSLC/CBSC/- தேர்வில் மூன்று இடங்களை பிடித்த மாணவ/மாணவியர் விபரம்**

| பரிசு விபரங்கள் | மாணவ/மாணவியர் பெயர் | தந்தை/தாயார் பெயர் | தந்தை/தாயார் பணிபுரியும் இடம் | |
|---|---|---|---|---|
| 1st Prize | VAIKAVI. V.S | SARAVANAN VELU. DR | Performing Arts | |
| 2nd Prize | PRIYANKA. M | MAHESH. K | On deputation JIPMER | |
| 2ND Prize | SHIVANI. T | THILLAIMANI. P. Er | CIF | |
| 3rd Prize | SIVACHANDRAN. K | KICHETTAN. J | Library | |

**HSC -தேர்வில் முதல் மூன்று இடங்களை பிடித்தத மாணவ/மாணவியர் விபரம்**

| பரிசு விபரங்கள் | மாணவ/மாணவியர் பெயர் | தந்தை/தாயார் பெயர் | தந்தை/தாயார் பணிபுரியும் இடம் | |
|---|---|---|---|---|
| 1st Prize | THAMIZHRAJ. M | MOUNISSAMY. T | Establishment Sec. | |
| 2nd Prize | SANGITA. S | SIVARAMAN. G. Dr. | Physical Education | |
| 3rd Prize | SOUMYA. R | RAMKUMAR. V | School of Humanities | |

இந்த கல்வி ஊக்கப்பரிசு அனைத்தும் வரும் 14.11.2014 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் புதுவை பல்கலைக்கழக டாக்டர் அம்பேத்கர் நிர்வாக கட்டிடத்தில் அமைந்துள்ள E.C. Hall- ல் நடைபெறும் புதுவை பல்கலைக்கழக அலுவலர் கூட்டுறவு கடன் சங்கத்தின் - வார விழா மற்றும் மாணவ/மாணவியர்களுக்கு பரிசளிப்பு விழா நிகழ்ச்சியல் வழங்கப்படும் என்பதனை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இனிவரும் கல்வியாண்டுகளில் நமது சங்க உறுப்பினர்களின் மகன்/மகள்கள் அதிக அளவில் பரிசுகளை பெறவேண்டும் என்பதே நமது சங்கத்தின் உயரிய நோக்கம். எனவே உறுப்பினர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியினை சிறப்பிப்பதுடன் தங்கள் மகன்/மகள் அனைவரையும் இந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ள செய்து அவர்கள் மேன் மேலும் பல பரிசுகளை பெற ஊக்கம் அளிக்குமாறு நமது சங்க இயக்குநர்கள் குழு சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

இவண்

(U. ராமநாதன்)
தலைவர்